WERNER NACHTIGAL
STEPHAN GÄNGEL

GLOBAL OUTREACH DAY

# ஒவ்வொருவரும் இன்னொருவரை ஆதாயம் பண்ணமுடியும்



# GLOBAL OUTREACH DAY

## (G.O.D.)

## உலகம் முழுவதும் நற்செய்தி பரப்பும் நாள்

### தரிசனமும் செயல்முறை வழிகாட்டியும்

## ஒவ்வொருவரும் இன்னொருவரை ஆதாயம் பண்ணமுடியும்


Imprint:

**Author, Text:** Werner Nachtigal, Stephan Gängel

**Tamil Translation:** Lydia T. Sakthisivantha, Julia A.Emmanuel

**Design, Layout:** Klaus J. Frauenholz, +*kreuz***design**

**Photos:** Fotolia **Back:** Yamuna river by Ekabhishek

1. Printing 350.000, Printed by Revival Movement Association



© 2013 Global Outreach Media



**www.globaloutreachday.com Email: info@globaloutreachday.com**

**Revival Movement Association**

**www.revivalmovement.org**

# உலகம் முழுவதும் நற்செய்தி பரப்பும் நாள்

## பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்வரும் சனிக்கிழமை

உலகம் முழுவதும் அநேகர் ஒருமித்து ஒருநாளில் நற்செய்தியைப் பரப்புவதே உலகம் முழுவதும் நற்செய்தி பரப்பும் நாளின் தரிசனமாகும்.

### ஒவ்வொருவரும் இன்னொருவரை ஆதாயம் பண்ணமுடியும். நாம் ஒருமித்து உலகத்தை ஆதாயமாக்கலாம்!

முதலாவது உலக நற்செய்தி பரப்பும் நாளில் உலகம் முழுவதும் ஏறத்தாழ 8 மில்லியன் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு, 25 மில்லியன் மக்களுக்கு நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டனர். இதில் 3 மில்லியன் பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றத் தீர்மானித்தனர் எனக் கேள்விப்பட்டோம். இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இந்த நாள் வெற்றி அடைவதற்குப் பல சபைகளும் பல நிறுவனங்களும் இணைந்து பணி ஆற்றுகின்றன.

• இந்த நாளில் விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்த ஆஸ்திரேலியா பெண் ஒருவரால் நற்செய்தி பரப்பும் நாளின் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்குபற்ற முடியவில்லை. அதற்குப் பதிலாக தனக்கு அருகிலிருந்த ஒரு-வரை இயேசுவிடம் வழிநடத்தினார்.

• 19 வயதுடைய ஒரு வாலிபன் பிரேசில் நாட்டின் பல நகரங்களிலிருந்து 300க்கும் அதிகமான கிறிஸ்தவர்களை இந்த நாளில் ஒன்று திரட்டினார்.

• ஒரு விபச்சார மாவட்டத்திற்கு இந்த நற்செய்தி அறிவிக்கப்பட்டது அதன்விளைவாக அது மூடப்பட்டது.

• மங்கோலியாவில், 5 மாதங்கள் சுயநினைவின்றி (கோமா நிலையில்) இருந்த ஒரு பெண் குணமாக்கப்பட்டார். இதன் பின் 3 மருத்துவர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

• இந்த நாளில் பாடசாலைகள், வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், வியாபார ஸ்தலங்கள், தெருவோரங்கள் போன்ற இடங்கள் மற்றும் இணையத்தளம் போன்ற பல இணையற்ற ஆக்கபூர்வமான வழிகளில் நற்செய்தி பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த நாளில் இன்னொருவரை ஆதாயம் பண்ணுவதுதான் இந்த உலகம் முழுவதும் நற்செய்தி பரப்பும் நாள் (G.O.D.) ஆகும்.

# வருடா வருடம்

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் கொண்டாடுகிறோம். அதே வேளையில் நாங்கள் எங்களைத் தேவனுக்கு சாட்சியாக பயன்பட ஒப்புகொடுப்போம்.

*பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப் 1:8)*

**உலகம் முழுவதும் நற்செய்தி பரப்பும் நாள் - ஒவ்வொரு வருடமும் - ஒவ்வொருவரும் - ஒவ்வொரு இடத்திலும்**

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பும் ஒவ்வொருவரும் தங்கள் கலாச்சாரம், திறமை, சாத்தியப்படும் வரம்புக்குள் தீவிரமாக ஈடுபடுவார்கள். G.O.D. ஒரு சாதாரண விசுவாசிக்கு இந்தநாளில் அறைகூவல் விடுகிறது.

## உலகம் முழுதும் நற்செய்தி பரப்பும் நாளுக்கு தயார் செய்தல்

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியானது உலகிலேயே மிகவும் நல்ல செய்தியும், இரட்சிப்பிற்கு ஒரே ஒரு வழியுமாயிருக்கிறது. அதனால் இயேசுவின் நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிப்பது மிகவும் அத்தியாவசியமாகக் காணப்படுகிறது. இயேசுவின் நற்செய்தியின் மையப்பகுதி என்னவென்றால் இயேசு எங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொண்ட சிலுவை மரணமும், கல்லறையிருந்து அவரின் உயிர்த்தெழுதலுமாகும்.

*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப் 4:12)*

இந்த நற்செய்தி என்ன என்று நீங்கள் விளங்கிக் கொள்ளவதற்கும், மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி வழிநடத்தவும், இந்த “செயல்முறை வழிகாட்டி” உங்களுக்கு உதவிசெய்யும்.

# முதலாம் படி: செய்தியைத் தெரிந்துகொள்ளல்

கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாகிய நாங்கள், செய்தியின் நான்கு படிமுறைகளை அறிந்திருக்கவேண்டும்.

1. தேவனுடைய திட்டம் 2. பிரச்சனை 3. தேவனின் அன்பு 4. தீர்மானம்

## 1. தேவனுடைய திட்டம்

தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அவர் இருக்கிறார் என்பதற்கு இதுவே போதுமான நிரூபணமாக இருக்கிறது. அவர் தமது மனதின் திட்டத்தின்படி, ஒரு சிறந்த நோக்கத்திற்காக: அதாவது மனிதன் தம்மோடு உறவு கொண்டு வாழவேண்டும் என்பதற்காக மனிதனை சிருஷ்டித்தார். சிருஷ்டிப்பின்போது உலகத்தில் எல்லாமே ஒழுங்காக இருந்தது. அப்போது யுத்தம், அநீதி, வியாதி, பாவம் ஆகிய ஒன்றுமே இருக்கவில்லை. பரதீசில் மனிதன் சிருஷ்டிகருடன் இசைவாக வாழ்ந்தான். இதுதான் எங்களுக்கான தேவதிட்டமாக இருந்தது.

*அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது. (ஆதி 1:31)*

## 2. பிரச்சனை

மனிதன் தன் சிருஷ்டிகரிடமிருந்து பிரிந்து தன் வழியில் செல்லத் தானாகவே முடிவெடுத்தான். அந்தத் தீர்மானத்தின் பலனை இன்று நாம் காண்கிறோம். ஒருவரோடு ஒருவர் சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதற்குப் பதிலாக, வெறுப்பு, எரிச்சல், வியாதி, யுத்தங்கள் போன்றவற்றுடன் வாழ்கிறோம். இந்த சோகமான காரியங்களைவிட, தேவனிடமிருந்து எங்கள் நிரந்தரமான பிரிவுதான் மிகவும் பயங்கரமானது. மனிதவர்க்கம் ஒருபோதும் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள பிரிவின் இடைவெளியைச் சரிப்படுத்த முடியாததாலும், தேவனுடைய கற்பனைகளின்படி ஒருபோதும் வாழமுடியாது என்பதாலுமே இவ்வளவு குழப்பங்கள் உண்டானது என இயேசு தெளிவாகக் கூறியுள்ளார்.

*நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானோம். (ரோமர் 3:10,23)*

## 3. தேவனின் அன்பு

தேவன் நீதியும், பரிசுத்தமுமானவராயிருந்தும் அவர் உன்னை நேசிக்கிறார். அதனால்தான் ஒவ்வொருவர்மேலும் நியாயமாக வரவேண்டிய நியாயத்தீர்ப்பின் தண்டனையை எடுத்துத் தன் சொந்தக் குமாரன் மேல் சுமத்தினார். உங்கள் பாவங்களுக்கான விலையை இயேசு சிலுவையிலே செலுத்தினார்.

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். ( யோவான் 3:16)*

## 4. மிக முக்கியமான தீர்மானம்

இயேசு மரித்து உயிர்த்தெழுந்தார். இன்றும் அவர் உயிரோடிருக்கிறார், அத்துடன் உன் பதிலுக்காகக் காத்திருக்கிறார். நீங்கள் நற்செயல்களை செய்வதன் மூலமோ, தியானம் செய்வதன் மூலமோ, அல்லது ஆலயத்திற்குப் போய் வருவதால் கூட தேவனை அடைய முடியாது. அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு: இயேசுவிடம் திரும்பி, அவர் உனக்காகச் செய்த எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, அவர் உன் பாவங்களை மன்னிக்கும்படி கேட்பதுடன் அவரைப் பின்பற்றுவதாகும்.

*அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)*

*கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9)*

# இரண்டாம் படி : நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளல்

நீங்கள் சொல்வதை ஒருவர் புரிந்துகொண்டால் மாத்திரமே இந்த நற்செய்தி அவரை இரட்சிக்க முடியும்.

## 1. சூழ்நிலையை ஏற்படுத்தலும் அவர்களுடைய கவனத்தை ஈர்த்தலும்

நற்செய்தியை மற்றவர் புரிந்துகொள்ளும் முறையில் அறிவிப்பதன் மூலம், இந்த நற்செய்தியின் போதனைக்கு ஒருவருடைய இருதயத்தைத் திறக்க முடியும். எல்லாவற்றுக்கும் முதலாவதாக, ஒருவருடைய கவனத்தைத் ஈர்ப்பது மிகவும் அவசியம். அப்படிச் செய்ய முடியாவிடில், உங்கள் வாாத்தைகளும், உங்கள் பிரயாசமும் வீணானது. ஒருவருடைய கவனத்தை திருப்ப சிலவேளைகளில் உங்களுக்குத் துணிவும், உருவாக்கும் திறமையும் தேவைப்படுகிறது. ஒருவருக்குப் பயனளிக்கும் முறையில் அறிவிப்பதற்கு, அவர்களிடம் சரியான கேள்விகளைக் கேட்டு நம்பிக்கை ஏற்படுத்துவது அவசிமானது. சாதாரண, நாளாந்த விடயங்கள் தொடர்பான கேள்விகளுடன் ஆரம்பியுங்கள். அவர்களின் பொழுதுபோக்கைப் பற்றியும், தற்போதைய நிகழ்வுகளின் செய்திகள் பற்றியும் அவர்களுடைய அபிப்பிராயங்களையும் கேட்கலாம். அது உங்களுக்கு அவருடைய நிலைமையைப் பற்றியும், நீங்கள் அவருடன் பயனளிக்கும் முறையில் தொடர்புகொள்ளவும் உதவியாயிருக்கும்.

அடுத்ததாக, அவர்களின் தனிப்பட்ட காரியங்களைப்பற்றி அணுகுங்கள். முதலிலேயே இயேசுவைப்பற்றி ஆரம்பிக்காதீர்கள். ஒருவருடைய பொது ஆர்வத்தைக் கண்டுபிடித்தலும், ஒரு உண்மையான வாழ்த்துதலைக் கூறுதலும் அறிமுகப்படுத்தும் நேரத்தில் உதவியாயிருக்கும். இதன் பின்பு “நீங்கள் தேவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்றும் “தனிப்பட்ட முறையில் உங்களுக்கு அவர் எப்படிப் பட்டவராயிருக்கிறார்?” என்றும் நீங்கள் கேட்கலாம். ஒரு எதிர்மறையான பதில் கிடைப்பது பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். சில வேளைகளில் நீங்கள் எதிர்மறையான பதிலைப் பெறலாம், ஏனெனில் தேவன் ஒவ்வொருவருக்கும் சுயமாகத் தீர்மானம் எடுப்பதைக் கொடுத்துள்ளார்.

நீங்கள் ஒருவருக்கு ஒரு காரியத்தைச் சொல்லலாம், ஆனால் அவரை வற்புறுத்தமுடியாது என்பதால் நீங்கள் அமைதியாய் இருங்கள். நல்ல கவனத்தைக் கவரும் கேள்விகளைக் கேட்பதுடன் பின்வரும் காரியங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**• பட்சமுள்ள ஒரு செயல் • ஒரு சிறிய பரிசு • ஒரு புத்தகம்...**

ஒரு புதியவரின் கவனத்தை ஈர்க்கக்கூடிய பல கருத்துக்கள் உள்ள ஒரு பட்டியலை வைத்துக்கொள்ளுங்கள். புதியவர்களின் வித்தியாசமான சூழ்நிலை, அவர்களின் நிலைமைகளுக்கேற்றபடி, ஒரு திட்டத்தைத் தயாரிக்கவும். சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி உங்கள் திட்டமும் மாற்றப்படலாம்.

## 2. ஆர்வத்தைத் தூண்டுதலும், பேச்சுவார்த்தையைத் தீவிரமாக்குதலும்

ஒருவருடைய கவனத்தை ஈர்த்த பின்பு அவரின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். சரியான கேள்விகளுடன் பொருத்தமான தகவல்களையும் கொடுத்து, அவர்களுக்குத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டவும். அவர்களின் ஆர்வத்தைக் கண்டவுடன் கேள்வி கேட்ப்பதைத் தொடரவும். சுருக்கமான பதில் சொல்லாமல் அவர்களின் ஆர்வத்திற்கேற்ப விரிவான, தட்டிக்கொடுக்கக்கூடிய பதில்களைச் சொல்லி இன்னும் ஆர்வத்தைத் தூண்டவும். "நமக்கு நித்திய வாழ்வு ஒன்று உண்டு, உன்னைத் தேவன் ஒரு நாள் நியாயம் தீர்ப்பார்" என அவருக்கு பிரசங்கம் செய்யாமல் "நீ மரித்தபின் என்ன நடக்கும்? அவருடைய சிங்காசனத்தின் முன் நிற்கும் போது அந்த நாளில் தேவன் உன்னைப்பற்றி என்ன சொல்வார்?" போன்ற கேள்விகளைக் கேட்டு சம்பாஷணையைத் தொடர்ந்து அவரை இயேசுவிடம் நடத்தலாம்.

நாம் இடைவிடாமல் தொடர்ச்சியாகப் பேசுவதன் மூலம், அவரின் ஆர்வத்தைத் தூண்டமுடியாது. தேவன் நமக்கு ஒரு வாயையும், இரு செவிகளையும் கொடுத்திருக்கிறபடியால் நாம் பேசுவதைக் குறைத்து, கேட்பதை அதிகரிக்கவேண்டும். எமது சாட்சிகள் அவர்கள் ஆர்வத்தைத் தூண்டும்பொழுது அவர்கள் தம் இருதயத்தைத் திறந்து தம் வாழ்க்கைக் கதைகளைப் பகிர்ந்துகொள்வார்கள்.

## 3. இயேசுவைப் பின்தொடர்வதற்கு விருப்பத்தை அதிகரித்தல்

ஒரு மீனவர் மீன் பிடிப்பதில் வெற்றிகாண, முதலில் தூளாக்கப்பட்ட ஒருவகை ஆகாரத்தைத் தண்ணீரில் போட்டு, மீன்களைத் தன்பக்கம் ஈர்த்தபின் உண்மையான ஆகாரத்தைப்போட்டு மீன்களைப் பிடிப்பதுபோல, நாம் பேசிக்கொண்டிருக்கும் நபரிடம் நேரத்தைச் செலவிட்டு அவரைப்பற்றி அறிந்தபின், அவரின் தேவைகள் என்ன என்பதையும், எந்தப் பக்கம் நம் சம்பாஷணையைத்திருப்ப வேண்டும் என்பதையும் அறியலாம். இயேசு இல்லாத ஒருவர் , தன் வாழ்வில் முக்கியமானதொன்றை இழந்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். இந்த நபர் இயேசுவை ஏற்றுக்கொள்வாரென, உங்கள் விசுவாசத்தைப் பயன்படுத்தி நீங்கள் நினைக்கவேண்டும். இதை நீங்கள் பொருத்தமானதுதான் என உணர்ந்தால், உங்கள் சொந்தக் கதையைப் பகிர்ந்து கொள்வதுடன், அவரின் தேவைக்காக ஜெபிப்பதற்கு உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

தம் ஆர்வத்தைக் காட்டும் முக பாவனையை உன்னிப்பாகக் கவனித்து, சரியான கேள்விகளைக் கேட்பது இன்றியமையாதது. அவர்கள் இந்த நற்செய்தியைப் பயனளிக்கும் வகையில் விளங்கிக்கொள்ள பின்வரும் சட்டத்தை ஞாபகத்தில் வையுங்கள். "சொல்லுவதைத் தவிர்த்து, கேள்விகளைக் கேளுங்கள்".

உதாரணமாக "உனக்காக இயேசு சிலுவையிலே மரித்தார். அவர் அதை ஏன் செய்தார் என்பது உனக்குத் தெரியுமா?" போன்ற கேள்விகளைக் கேளுங்கள். அந்த நபரின் நிலைமையை அறிந்து, உங்கள் சொந்த

சாட்சியைச் சொல்லி, அந்த நபர் “அது எனக்கும் வேண்டும்” எனத் தன் இருதயத்தில் சொல்லத்தக்கதான விருப்பத்தைத் தூண்டி விடுங்கள்.

## மூன்றாம் படி : இந்த நற்செய்திக்குப் பிரதிபலிப்பைப் பெறுதல்

### 1. அவர்களுடைய தீர்மானத்தைப்பற்றிக்கேள்

அவர்களுடைய பிரதிபலிப்பை அடையும் நிலைக்கு நாம் இப்போது வந்திருக்கிறேம். இனி நீ எடுக்கும் முயற்சியைக் குறித்துக் கவலைப்படாமல், “இப்போது நீ தேவனை ஏற்றுக்கொள்கிறாயா?” எனச் சாதாரணமாக கேளுங்கள்.

*தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். (2 கொரிந்தியர் 5:19)*

ஒரு சம்பாஷணையின் முடிவில் எப்பொழுதும் ஒரு பதில் இருக்கவேண்டும். நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் அந்த நபரிடம் இதைக்குறித்து, ஒரு தீர்மானம் எடுக்கும்படி அழைப்புக் கொடுங்கள். இந்த விஷயத்தில் அனேக கிறிஸ்தவர்கள் தயக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் நற்செய்திப் பகிர்ந்து கொண்டிருக்கும் அந்த நபர் உண்மையில் மனம் திறந்திருப்பாராயின், இதற்கான ஒரு முடிவையும் எடுப்பார்.

இயேசுவைப் பின்பற்றத் தேவையானவற்றைப்பற்றி விளக்கம் கொடுப்பதுடன் ஒரு தெளிவான அழைப்புக்கொடுங்கள்.

**1. உன் பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்தாரென நீ விசுவாசிக்கிறாயா? “ஆம்”**

**2. இயேசு மரித்து, உயிர்தெழுந்ததை நீ விசுவாசிக்கிறாயா? “ஆம்”**

**3. இயேசுவை உன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ள நீ விரும்புகிறாயா? “ஆம்”**

இந்த நபருடன் ஜெபிக்கத் தயங்கவேண்டாம். எல்லா விடயங்களும் சொல்லப்பட்டாயிற்று. நாங்கள் மக்களை வற்புறுத்தவோ அல்லது மாற்றவோ கூடாது. ஆனால் அதற்கு மேலாக நாங்கள் ஒரு சங்கத்திற்கு ஆட்களைக் சேர்ப்பதைப் பற்றியும் பேசவில்லை, இது மக்களின் வாழ்வா சாவா என்பதைப் பற்றிய விடயமாகும்.

## 2. உனக்குப் பின்னால் அவர்களை ஜெபிக்கும்படி கேள்

இப்பொழுது நீங்கள் ஜெபிக்கும்போது, அந்த நபரையும் உங்கள் பின்னால் சத்தமாக ஜெபிக்கும்படி கேளுங்கள். அவர்களுடைய கண்களை மூடி, பின்வருமாறு சத்தமாக ஜெபிக்கும்படி சொல்லுங்கள்.

*இயேசுவே! நீரே தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன். நீர் எனது எல்லாப் பாவங்களுக்காகவும் மரித்தீரென நான் விசுவாசிக்கிறேன். நீர் என்னைத் தயவாக மன்னித்து என் இருதயத்திற்குள் வாரும். நீர் மரித்தோரிலிருந்து எழும்பினதையும், நீர் இன்றும் உயிரோடு இருக்கிறீரென்பதையும் நான் விசுவாசிக்கிறேன். உம்மை எனது தேவனாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறேன். நான் என் வாழ்நாள்முழுவதும் உம்மையே சேவிப்பேன். ஆமென்.*

## 3. அவர்கள் செய்த அறிக்கையைப் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டார்களா எனக் கேட்கவும்

அவர்கள் எடுத்த இந்த முடிவைத் திட்டமாக உறுதிப்படுத்துவது இன்றியமையாதது. இந்த நபர் இயேசுவை ஏற்றுக்கொண்டு சில நிமிடங்களாக இருப்பதால், அவர்களோடு ஐக்கியம் வைப்பதும், அவர்களை விசாரிப்பதும் மிகவும் அவசியமாயிருக்கிறது. அவர்கள் எடுத்த இந்த முடிவு எவ்வளவு பிரதானமானது என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தவும்.

கடைசியாக, உங்கள் விபரங்களைப் பகிர்ந்து கொண்டு, அடுத்த 72 மணி நேரத்திற்குள் அவர்களைத் திரும்பவும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும்.
புதிய ஆத்துமாவிற்குப் பின்வரும் முக்கியமான காரியங்களை விளங்கப்படுத்தவும்:

**1. வேதாகமம் -** இது தேவனுடைய வார்த்தை. ஒவ்வொரு நாளும் இதை வாசிக்கவும்.

**2. ஜெபம் -** ஒவ்வொரு நாளும் தேவனுடன் பேசுங்கள்

**3. திருச்சபை -** உங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய மக்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

# செயல்முறைப் படிகள்

**ஒவ்வொருவரும் இன்னெருவரை ஆதாயம் பண்ணமுடியும்!** இந்த நாளில் மக்களை ஆதாயம் பண்ணிக் கொள்ள எண்ணிறந்த வழிகள் உண்டு. நீங்கள் மக்களை ஆதாயம் பண்ணக்கூடிய உங்களுக்கு இயலுமான புதிய வழிமுறையைக் கண்டுபிடியுங்கள்.

**நேருக்கு நேர் -** ஒருவரை தேநீர் அருந்த அல்லது உணவு உண்ண அழைத்து அவருக்கு இயேசுவை பகிர்ந்துகொள்ளவும்.

**இருவர் இருவராக -** நீங்கள் உங்கள் திருச்சபையில் சந்தித்து, இருவர் இருவராக புறப்பட்டுப் போய், சந்தைகளில், வைத்தியசாலைகளில், வீதிகள் போன்ற இடங்களில் மக்களை ஆதாயம்பண்ணலாம்.

**கவனிப்பும் பகிர்ந்துகொள்ளுதலும் -** ஒருவருக்கு நன்மை செய்து, நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளலாம்.

**உங்கள் பகுதியைச் சந்தித்தல் -** ஒரு குறிப்பிட்ட பகுதியில்போய் வீடு வீடாகச் சந்தித்து, அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் வழிமுறைகளைப்பற்றித் திட்டம் தீட்டவும்.

**புதிய முறைகளைக் கையாளுதல் -** சிறைச்சாலைகளில், சந்தைவெளிகளில் அல்லது ஆநாதை இல்லங்களில் போய் திறிந்தவெளிக்கூட்டங்களை நடத்த ஏற்பாடுசெய்து நற்செய்தியைப் பரப்பலாம். மக்களை ஆதாயம்பண்ண இப்படிப் பல வழிகள் உண்டு.

மேலதிக தகவல்களுக்குப் பின்வரும் இணையத்தளத்திற்குச் செல்லவும். அத்துடன் உங்கள் கருத்துக்களையும் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**www.globaloutreachday.com**

இந்த நாளில் முழு உலகத்தையும் மாற்றமுடியும்! உங்களைத் தேவன் உங்கள் அயலாருக்கும் உங்கள் தேசத்துக்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்துவார்.

**ஒவ்வொருவரும் ஒரு புதியவரை ஆதாயம் பண்ணமுடியும் ~ நாம் ஒருமித்து உலகத்தை ஆதாயமாக்கலாம்.**

**ஆயத்தமாய் இருங்கள்!**

# ஒவ்வொருவரும் இன்னொருவரை ஆதாயம் பண்ணமுடியும்

உலகம் முழுவதும் அநேகர் ஒருமித்து ஒருநாளில் நற்செய்தியைப் பரப்புவதே **உலகம் முழுவதும் நற்செய்தி பரப்பும் நாளின்** தரிசனமாகும்.

**ஒவ்வொருவரும் இன்னொருவரை ஆதாயம் பண்ணமுடியும். நாம் ஒருமித்து உலகத்தை ஆதாயமாக்கலாம்!**

முதலாவது உலக நற்செய்தி பரப்பும் நாளில் உலகம் முழுவதும் ஏறத்தாழ 8 மில்லியன் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு நற்செய்தியை பகிர்ந்து கொண்டனர். G.O.D. ஒவ்வொரு கிறிஸ்தவனையும் வெளிஉலகத்திற்கு சென்று நற்செய்தி பரப்பும்பணியில் ஆர்வமாய் பங்கேற்க அறைகூறவல் விடுகிறது. எந்த ஒரு நபரும் இதில் பங்கேற்கலாம். இதற்கு பணம் தேவையில்லை. தேவையானது, புறப்பட்டுபோவதற்கான விருப்பம்மட்டுமே. உங்களுக்கு விருப்பமான முறையில் இந்த நற்செய்தி பணி செய்யலாம்.

www.revivalmovement.org